RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s194

OPEN ACCESS

# அஷ்டப்பிரபந்தத்தில் காணலாகும் அறக்கருத்துகள்

ம. திவாகர் [அ, *], ந. கிருஷ்ணவேணி [அ]

[அ] தமிழ்த்துறை, அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), கும்பகோணம்-612002 தமிழ்நாடு, இந்தியா

# The Ethical Concepts Found in the Ashtaprabandham

M. Divahar [a, *], N. Krishnaveni [a]

[a] Department of Tamil, Government Arts College (Autonomous), (Affilieted with Bharathidasan University), Kumbakonam-612002, Tamil Nadu, India

* Corresponding Author: manimarandivahar@gmail.com

Received: 02-08-2022
Revised: 03-10-2022
Accepted: 20-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Charity, wealth, happiness, and home are the principles of the life of the Tamils. Of these, Charity is the foremost. The word 'Charity' means 'to do good and eliminate the unwanted'. Charity is the basis of the life of Tamils. Domesticity, asceticism, love, and war are all inexhaustible in all activities. In that way, there are many virtues that humanity has to follow. Among them are the inner-oriented virtues of morality, and external virtues such as love, modesty, morality, neutrality, endurance, truthfulness, education, friendship, charity, shelter, etc. From Sangam literature to modern literature, all kinds of literature contain concepts of morality. In this way, this study reveals that the Ashtaprabandham of Pillai Perumal Iyengar is full of ethical ideas.

**Keywords:** Ashtaprabhandham – Sutras – Alvars – Acharyas – Valluvam – Aram – Pasuram – Prabandham – Friend (Thozhi) – Nursing Mother – Maternal Mother

## முன்னுரை

தமிழிலக்கியம் மிகப் பழமை வாய்ந்தது பண்பட்டது. எப்பொழுது எங்கு தோன்றி வளர்ந்தது என்று சொல்ல முடியாத படிக்குப் பழமையானது. இத்தகு சிறப்புடைய தமிழ் மொழியின் பெருமையினைப் போற்றுவதாய் பல இலக்கியங்கள் தோன்றியுள்ளன. சங்க இலக்கியங்கள் தொடங்கி நவீன இலக்கியங்கள் வரை அனைத்து வகை இலக்கியங்களும் தமிழின் பெருமையைப் பறைசாற்றுகின்றன. இலக்கியம் என்பது சமூகக் காரணிகளின் விளைவு என்பர். இந்த இலக்கிய வகையில் பக்தி இலக்கியமும் அடங்கும். தமிழிலக்கியங்களின் மறுமலர்ச்சி பக்தி இலக்கியங்கள் ஆகும்.

ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும் இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும் கிரேக்கம் இசையின் மொழி என்றும் ஜெர்மன் தத்துவத்தின் மொழி என்றும் இத்தாலி தூதின் மொழி என்றும் பிரெஞ்சு காதலின் மொழி என்றும் கூறுவது ஒக்குமெனில், தமிழ் பக்தியின் மொழி என்று கூறுவது ஒக்கும் என தனிநாயக அடிகள் கூறுகிறார்.

இத்தகு பக்தி இலக்கியங்களிலே மனிதர்களுக்குத் தேவையான அறக்கருத்துகள் அதிகளவில் இடம் பெற்றுள்ளன. பிள்ளைப்பெருமாள் ஐயங்காருடைய அஷ்டப்பிரபந்தத்தில் அறம் பற்றிய கருத்துகள் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றை அகம் சார்ந்த அறம் என்றும், புறம் சார்ந்த அறம் என்றும் வகுத்து ஈண்டு இவ் ஆய்வு விளக்குகிறது.

## அஷ்டப்பிரபந்தம்

பிரபந்தம் என்பது சிற்றிலக்கியம் எனப்படும். எட்டு சிற்றிலக்கியங்களின் தொகையே அஷ்டப்பிரபந்தம் எனப்படும். தமிழில் வைணவ சமயத்தில் நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்திற்கு அடுத்துத் தோன்றிய பிரபந்தம் பிள்ளைப்பெருமாள் ஐயங்காருடைய அஷ்டப்பிரபந்தம் ஆகும். அஷ்டப்பிரபந்தத்தின் சிறப்பினை "அஷ்டப்பிரபந்தம் கற்றவன் அரைப் பண்டிதன்" என்ற முதுமொழியால் அறியமுடிகிறது. இதில் ஆழ்வார்கள் கருத்துகளும், சொற்களும், சொற்றொடர்களும் அதிகம் இடம்பெற்றுள்ளன. ஆதலின், இது ஆழ்வார்களின் பாசுரங்களுக்கு வழி நூல் போன்றது ஆகும். ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களின் சாரமாகவும், ஆச்சாரியார்களின் ரகஷ்ய கிரந்தங்களின் பொருள் பொதிந்தவையாகவும் விளங்குகின்றது. 12-ஆம் நூற்றாண்டில் எழுந்த சிற்றிலக்கியம் ஆகும்.

அஷ்டப்பிரபந்தத்தின் செய்யுற்றொகை 751 ஆகும். நூலுக்குப் புறம்பாக அமைந்த சிறப்புப்பாயிரங்கள் 8 காப்புச் செய்யுட்கள், அவையடக்கம் முதலியன 22 பிற்சேர்க்கைகள் 9 என ஆக மொத்தம் 790 செய்யுட்கள் இதன்கண் அமையும். அஷ்டப்பிரபந்தம் என்னும் பெயர் ஆசிரியரால் இடப்பட்டது அன்று. இது பதிப்பாசிரியர்கள் அவர்கள் காலத்தில் நிலவிய கலாச்சாரத்திற்கு ஏற்ப தொகுத்து அளித்துள்ளனர் என்பர்.

இந்த அஷ்டப்பிரபந்தம் முழுமுதற் கடவுளான திருமாலைப் போற்றுதலோடு நின்றுவிடாது மனிதனுக்குத் தேவையான அறங்களையும் தன்னகத்தே அடக்கிக் கொண்டு விளங்குகிறது.

## அறம் - விளக்கம்

அறம் என்ற சொல்லிற்கு தானம், தருமம் என்ற பொருள் உண்டு. நற்செயல்கள் அனைத்துமே அறத்தின்பால் பட்டது ஆகும். அறம் பற்றி,

"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள், மன்னுயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும், உறையுளும் அல்லது
கண்டதுஇல்"

என உணவு, உடை, இருப்பிடம் கொடுப்பதே சிறந்த அறம் என்று மணிமேகலை போற்றுகிறது (Puliyur Kesikan, 2018).

வள்ளுவம் அறத்தைப் பற்றி,

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்"

என்று கூறுகிறது. இதற்கு, ஒருவன் தன்னால் இயன்ற வரையில் அறச்செயல்களைச் செய்யக்கூடிய இடங்களில் எல்லாம் இடைவிடாது செய்ய வேண்டும் என்பது பொருள்.

நவீன இலக்கிய வகைகளுள் ஒன்றான புதுக்கவிதை வடிவிலும் அறக்கருத்துகள் இடம் பெறுகின்றன.

"தொடங்குக பணியைத் தொடங்குக அறத்தை!
கடலிலும், வானிலும், கவினுறு நிலத்திலும்,
வாழுயிர் அனைத்தும், மக்கள் கூட்டமும்,
வாழுமாறு - அன்பு மணிக்குடை யிங்கீழ்
உலகினை ஆண்டார் உயர்வுற நம்மவர்"

என்று பாரதிதாசன் அறத்தைப் பற்றி இயம்புகிறார் (Ezhilventhan, 2017).

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அறத்தின் தோற்றுவாயாக ஐம்பொறிகள் அமைவதை,

“பொய் வம்பு அல, என்று தோன்றும் புல்லோர்கட்கு,

போத நல்லோர் ‘உய்வம், பலனும் அவனே’ என்று ஓதி

உணர்வார் - நெஞ்சே”

என்ற பாசுரத்தால் இயம்புகிறார் (Ezhilventhan, 2017).

## அஷ்டப்பிரபந்தத்தில் அறக்கருத்துகள்

அறம் என்பது முன்னம் குறிப்பிட்ட பொருளோடு நீதி, ஒழுக்கம், நற்செயல் எனப் பிற பொருள்களையும் தரும். உறுதிப்பொருள்கள் நான்கனுள் அறம் என்பதே தலைமைப் பெறுகிறது. ஒழுக்கம் என்ற நெறியும் இவ் அறத்தின்கண்ணே அமையும். அஷ்டப்பிரபந்தத்தில் அறக்கருத்துகளை அகம் சார்ந்த அறம், புறம் சார்ந்த அறம் என்று பாகுபடுத்திக் காணமுடியும்.

அகம் சார்ந்த அறமாக அறத்தோடு நிற்றல் நிலையும், புறம் சார்ந்த அறமாக அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, பொறையுடைமை, வாய்மை, கல்வி, நட்பு, ஈகை, அடைக்கலம் தருதல் முதலியனவும் அமைகிறது.

## அகம் சார்ந்த அறம்

களவு, கற்பு வாழ்க்கைப் பற்றிய அறநிலைகளே அகம் சார்ந்த அறமாகும். இன்பத்தை நுவலும் அகப்பொருள் முழுவதிலும் அறம் இழையோடுவதைக் காணமுடிகிறது. அக வாழ்வில் அறத்தோடு நிற்றல் என்பது மிக முக்கிய அறநிலையாகக் கருதப்படுகிறது. காரணம், தலைவன், தலைவியின் களவு வாழ்வைக் கற்பு வாழ்விற்கு இட்டுச் செல்லுவது இந்த அறத்தோடு நிற்றல் நிலையே ஆகும். இது ஒருவித ஒழுங்கு முறையில் நிகழ்வது ஆகும். இதனை, அகத்துறை இலக்கணமும், அகத்துறைப் பாடல்களும் உணர்த்துகின்றன.

காதல் கொண்ட தலைவி தன் காதலின் ஆற்றாமையினை தாளாதவளாய், அதற்கு வழி யாது என்று அறியாத நிலையில் தன் காதலைத் தோழிக்குக் கூறி அறத்தொடு நிற்பாள் தலைவின் அக்காதல் நிறைவேறத் தோழி அதனைச் செவிலியிடம் கூறி அறத்தொடு நிற்பாள் செவிலியோ தலைவியைப் பெற்ற நற்றாய்க்குக் கூறி அறத்தொடு நிற்பாள் நற்றாய் தலைவியின் தந்தை, தன்னையர்க்கு குறிப்பால் தலைவியின் காதலைத் தெரிவித்து நிற்பாள். இதுவே அறத்தொடு நிற்றலின் முறைமை ஆகும். இதனை,

“தலைவி பாங்கிக் கறத்தொடு நிற்கும்

பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்கும்

செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்

நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு

நிற்கும் என்ப நெறியறிந் தோரே”

என்று நம்பியகப்பொருள் சூத்திரம் விளக்குகிறது (Thirugnanasambantham, 2010).

நற்றாய் தலைவியின் காதலினை தந்தை தன்னையர்க்கு சொல்லால் கூறாள். குறிப்பாலேயே உணர்த்துவாள். காரணம், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் நால்வரும் பெண்டிர்'. ஆதலின், அவர்கள் ஒருவொருக்கு ஒருவர் பேசுவதற்கு உரியவர்கள். ஆனால், தந்தை, தன்னையர்கள் ஆண்கள். ஆதலினால் பெண்கள் நேரிடையாக பேசாது குறிப்பாலே உணர்த்துவார்கள்.

இதனை,

“தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப”

என்று கூறுவதால் அறிய முடிகிறது (Thirugnanasambantham, 2010).

‘காமர்கடும்புனல்’ எனத் தொடங்கும் கலிப்பாட்டு

அறத்தொடு நிற்றலை சிறுகதைப் பாங்கில் எடுத்துரைக்கிறது (Puliyur Kesikan, 2018).

“அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட

என்னையர்க் குய்த்துரைத்தாய் யாய்”

என்று அறத்தொடு நிற்கும் இயல்பினைச் சுட்டுகிறது (Puliyur Kesikan, 2018).

இந்த அறத்தொடு நிற்றல், பக்தி இலக்கியத்தில் ஆழ்வார்களால் பெரிதும் கையாளப்பட்டுள்ளது. ‘தோழியின் பாசுரமாக’ அமையும் குட்டநாட்டுத் திருப்புலியூர் மாயபிரான் மீது நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழியில் இத்துறை, ‘பராங்குச நாயகி’ என்னும் பாசுரத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த அறத்தொடு நிற்றல் நிலையைப் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் பின்பற்றியுள்ளார்.

## தலைவி தோழியர்க்கு அறத்தொடு நிற்றல்

தலைவி களவொழுக்கத்தில் தலைவனைக் கூடிப் பின்னர்ப் பிரிந்த துயரத்தை ஆற்றி அடக்கும் வலிமையற்றவளாய் ஆன பிறகு, தன் தோழிக்குத் தனது நிலையைக் கூறி தலைவனை அடைந்தால் ஒழிய தான் கொண்ட நோய்க்கு வேறு மருந்தில்லை என்று அறத்தொடு நிற்பாள்.

இந்நிலையில் அமைந்த அஷ்டப்பிரபந்த பாசுரம், ‘தலைவி தன்னுடைய காதல் நோய் பிறவற்றால் அடங்காது. இது அடங்க வேண்டுமாயின் அன்று வருணனை அழைத்துக் கடலை அணைக்கட்டி அடைத்தவனின் மாலையை கொணர்ந்து வந்து கொடுக்க வேண்டும். அப்பொழுதே தான் பிழைப்பேன்’ என்று தோழிக்கு அறத்தொடு நின்று கூறுவதாய் அமைகிறது.

“பிழைத்தலை யான் எண்ணிப் பேசுகிறேன் இப்பிணி மற்றொன்றாள்

மழைத்தலை வார்குழலீர் தணியாது வருணனைமுன்

அழைத்து அலை அங்கு அடைந்தார் கலங்காரர் கலங்கல் நல்கீர்

முழைத்தலை நின்று மலயாநிலம் வந்து மோதும் முன்னே” (Ezhilventhan, 2017) என்பது.

மேலும்,

“நெஞ்சில் அம்பு ஆற்றமுடியாது வேள்எய்து நீள் இரவும்

துஞ்சிலம் பால் துளியும் நஞ்சம்ஆம் சொரி கல்மழையை

அம்சிலம்பால் தடுத்தார் அலங்காரர் அடிவிளக்கும்

செஞ்சிலம் பாற்று அருகே கிடத்தீர் உயிர்தேற்றுதற்கே” (Ezhilventhan, 2017)

என்றும்,

“நெஞ்சு உகந்ததை உமக்கு உரைத்தேன்”

என்றும் பிழைத்திருக்க வேண்டுமாயின் என்னைத் தலைவனிடத்தில் சேர்க்க வேண்டும் எனக் கூறி தோழிக்குத் தலைவி அறத்தோடு நிற்றலை இயம்புகிறதைக் காணமுடிகிறது (Ezhilventhan, 2017).

## செவிலித்தாய் நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்

இயற்கைப் புணர்ச்சி மூலம் தலைவியைக் களவில் கூடிய தலைவன் பிரிந்த பின்பு தலைவி பிரிவாற்றாமை துயரத்தினால் உள்ளம் அழிந்து உடல் மெலிந்து கைவளையல்கள் விரல் மோதிரமாக நெகிழ்ந்து கீழே விழும்படியே உடல் குன்றி, நாணம் குலைந்து, அறிவு இழிந்து, நிலைமாறி நின்றாள். தலைவியின் இத்துயரைத் தோழியின் அறத்தொடு நிற்றலால் அறிந்த செவிலித்தாய், நெஞ்சம் பொறாதவளாய், அத்தலைவனுக்குத் தலைவியை மணம் முடிக்க விரும்புகிறவளாய் தலைவியின் தாயிற்கு இதைத் தெரிவித்து அறத்தொடு நிற்பது ஆகும்.

செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல் நிலையில் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், திருமாலின் மீதான அவருடைய ஈடுபாட்டினை வெளிப்படுத்துகிறார். இதனை,

"வரைஆழி வண்ணார் அரங்கேசர் ஈசன்முன்வாணன் திண்தோள்

வரைஆழியார் புள்ளின் வாகனத்தேம வந்தநாள் தொடுஇற்றை

வரைஆழிய துயர்ஆய் தூகம் நானும்மதியும் செங்கை

வரைஆழியும் வளையும் இழந்தாள் என்மட மகளே"

என்னும் பாசுரம் வழியே விளக்குகிறார் ஆசிரியர் (Ezhilventhan, 2017).

இந்த அறத்தோடு நிற்றலே அகம் சார்ந்த அறத்தில் முக்கியமானது ஆகும். காரணம், இந்த நிலையே களவு வாழ்க்கையைக் கற்பு வாழ்க்கைக்கு இட்டுச்செல்கிறது என்பதால் ஆகும். ஆதலினால் இந்த அறம் மனித வாழ்விற்கு இன்றியமையாததாய் அமைவதை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், திருமாலுடைய திருவடியைப் பற்றி இன்புறுதற் பொருட்டு, அதற்குத் துணைபுரிவார் யாரென்று கண்டு நாடி அறிந்தவராய், பாகவதர்களைத் தோழியும், செவிலியும் ஆக வடித்துக் கொண்டு அகத்துறைகளுள் ஒன்றான அறத்தொடு நிற்றலை கையாண்டுள்ளமையை உணரமுடிகிறது. இதன் வழியே அக வாழ்வில் அறத்தின் இன்றியமையாமை வெளிப்படுகிறது.

## புறம் சார்ந்த அறம்

அகம் சார்ந்த அறநெறியால் களவு வாழ்க்கையில் இருந்து கற்பு வாழ்க்கைக்கு அடிவைத்த தலைவனும், தலைவியும் பின்பற்ற வேண்டிய அறங்கள் புறம் சார்ந்த அறங்கள் என்பர். அவ்வகையில், புறம் சார்ந்த அறங்களாக குறிப்பிடத்தக்கன, அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, பொறையுடைமை, வாய்மை, கல்வி, நட்பு, ஈகை, அடைக்கலம் தருதல் முதலியன அமைகின்றன. இந்த அறங்கள் மனிதனை முக்திப் பேற்றிற்கு அல்லது அவன் உயர்ந்த நிலையை அடைவதற்கு வித்திடுகிறது.

## அன்புடைமை

அன்பானது எல்லா உயிர்களிடத்தும் காணப்படுவது ஆகும். இந்த மனித வாழ்வு இன்பம் நிறைந்து அமைதற்கு அன்பே காரணமாகிறது. இத்தகு அன்பிற்கு அணையிடுதல் என்பது இயலாதது ஆகும் என்று வள்ளுவம் அன்பின் வலிமையைக் கூறுகிறது. இதனை,

"அன்பிற்குமு ண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்

புன்கண்நீர் பூசல் தரும்"

என்ற குறள் இயம்புகிறது (Sundarrajan, 2015).

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் திருமாலின் மீது கொண்ட மாளாக்காதலினால் தன் அன்பு மேலிடத் தலைவி நிலையில் நின்று தலைவனான திருமாலினை அடைதற்கு உபாயம் தேடுவதாய்,

"நின்பாய் திருநெடுங்கண் வளர்கைக்கு

அருமாதவம் என்ன செய்தாய், பணி

எனக்கு அம்புதியே?" (Ezhilventhan, 2017)

என்றும்,

"திரிகின்ற பொற்குன்றம் அழுந்தாமல்

ஆமைத் திரு உருஆய்,

பரிக்கின்றதில் பெரும் பாரம் உண்டோ?"

என்றும், வள்ளுவத்தின் வழிநின்று, அன்பினது தன்மையினை எடுத்துரைக்கிறார் (Ezhilventhan, 2017).

## கல்வி

கல்வி ஒருவனை உயர்ந்த நிலையில் வைக்கிறது. எச்செல்வம் அழிய நேரிடினும், கல்விச் செல்வம் அழிவதில்லை. ஏனைய செல்வங்கள் அள்ளிக் கொடுக்க க ரைந்து விடுவன. ஆனால் கல்விச் செல்வம் மட்டும் அள்ளிக் கொடுக்க கொடுக்க, பெருகும் தன்மையுடையது. மனிதன் தன் வாழ்வில் நல்லவை, தீயவை யாது? என்னும் நிலையைக் கல்வியின் வழியே அறிகிறான். எந்தச் சூழலிலும் கல்வியே ஒருவனுக்குக் கைப்பொருளாக அமையும் சிறப்புடையது. "கற்றோர்க்கு செல்லுமிடம் எல்லாம் சிறப்பு" என்பர். இதனை,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப் புடைத்து"

என்று வள்ளுவம் சிறப்பிக்கிறது (Sundarrajan, 2015).

மேலும், இக்கல்வியே ஒருவனுக்கு அடக்கத்தையும் நல்குகிறது. பிள்ளைப்பெருமாள் ஐயங்காருடைய பாசுரங்களும் கல்வியின் சிறப்பைக் காண முடிகிறது. இதனை,

"ஆழ்வார்கள் பைந்தமிழை யாதரித்த வேங்கடமென்

தாழ்வான புன்சொல்லும் தாங்குமோ?"

என்று கூறுவதாலும் (Ezhilventhan, 2017), தெளிந்த செறிவான அறிவினை மனிதனுக்கு புகட்டுவது கல்வியே என்பதினை,

"ஆசு கவிக்கும் புலவீர்! புகழ்மீன் அரங்கனையே!" (Ezhilventhan, 2017)

என்றும்,

"கண்வளரும்

கனக விமானத்து அரங்கனை நாச்

சொல்ல கற்றப் பின்னே"

என்றும் இயம்புவதாலும் கல்வியின் சிறப்பு வெளிப்படுகிறது (Ezhilventhan, 2017).

## அடக்கமுடைமை

அடக்கம் என்னும் நல்லறம் உயோர்ந்தோர் அவையின்கண் சேர்க்கும் தன்மையுடைத்தது ஆகும். அடக்கத்தை அதன் செரிவறிந்து காத்தல் வேண்டும் என்பர் கற்றோர். வாய்ச்சொல் தவறாமை

அடக்கத்திற்கு முதற்படியும், இன்றியமையாததும் ஆகும். இந்த அடக்கம் என்னும் பண்பு செல்வர்க்கு மேலும் செல்வம் சேர்ப்பது போல ஆகும் என வள்ளுவம் இயம்புகிறது.

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்

செக்வர்க்கே செல்வம் தகைத்து"

என்ற குறள் விளக்குகிறது (Sundarrajan, 2015). இப்பண்பு பிள்ளைப்பெருமாள் ஐயங்காருடைய பாசுரங்களிலும் காணப்படுகிறது.

"ஆழ்வார்கள் பைந்தமிழை ஆதரித்த வேங்கடமென்

தாழ்வான புன்சொல்லும் தாங்குமோ?" (Sundarrajan, 2015)

என்றும்,

"பட்டர் திருதாட்கு அடிமைப்பட்ட காதல்

மணவாளதாசர் புன்சொல் கொண்ட"

என்றும்,

தாம் பாடிய பாசுரங்கள் யாவும் இழிந்தவையே ஆகும். பொருத்தருள்க என்று எம்பெருமானிடம் வேண்டுவதாய் அமைந்துள்ளது. இது ஐயங்காருடைய அடக்கமுடைமை என்னும் நெறியைக் காட்டுகிறது (Sundarrajan, 2015).

## ஒழுக்கமுடைமை

வாழ்தலுக்கான வரைமுறை அறமே ஒழுக்கமுடைமை ஆகும். இது வீடுபேற்றிற்கு வழி வகுப்பதாகும். அதனால், உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது. ஒழுக்கம் என்னும் அற நிலையைத் தமிழிலக்கியங்கள் போற்றிப் புகழ்கின்றன. இத்தகு ஒழுக்க நெறியை,

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்

எய்துவர் எய்தாப் பழி" (Sundarrajan, 2015)

என்றும்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்"

என்றும் வள்ளுவம் விளக்குகிறது (Sundarrajan, 2015).

அஷ்டப்பிரப்பந்தத்தில் ஆசிரியர், ஒழுக்க நெறியைக் கடைப்பிடிப்பவர்கள் தவம் புரிந்தவர்கள் என்று குறிக்கின்றார். இந்நெறியை பின் பற்றுவார்க்கு வீடு கிட்டும் என்றும் இயம்புகிறார். இதை,

"நேரவிரும் புண்டரர்க்கு அருள்வான் நெடுவேங்கடத்தான்"

என்று கூறுவதனால் அறியமுடிகிறது (Ezhilventhan, 2017).

"வீர் அங்கு - ஆகிய ஐவரை மாற்றி, விட அரவுஇன்

போர் அரங்கு ஆக நடித்த பொற்றாள் பற்றி"

என்று ஐம்பொறிகளின் அடக்கமே ஒருவனை வீடு பேற்றிற்கு அழைத்துச் செல்லும் என்பதினை உணர்த்துகிறார் (Ezhilventhan, 2017).

"சருகு அருந்தி ஐம்பொறி வருந்து அருந்தவர்கள்"

என்ற பாசுர அடியால் ஒழுக்க நெறியைப் பின்பற்றுவாரை ‘அருந்தவம் புரிந்தவர்’ என்று குறிப்பிடுகின்றார் (Ezhilventhan, 2017).

## நடுவுநிலைமை

அறநெறிவாழ்வில் நடுவுநிலைமை தவறாது நீதியைப் போற்றுதல் வேண்டும். அறம் எல்லோர்க்கும் பொதுவானது என்ற உணர்வைப் பெறுவதே நடுவுநிலைமை ஆகும். நன்மை தீமையை மறந்து அறத்தைப் போற்றுவதே நடுவுநிலைமை என்ற அறம் என்று வள்ளுவம் கூறுகிறது.

“நன்றே தரினும் நடுஇகந்தாம் ஆக்கத்தை

அன்றே ஒழிய விடல்”

என்ற குறள் இதனை இயம்புகிறது (Sundarrajan, 2015).

மேலும்,

“கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்

கோடாமை சான்றோர்க்கு அணி”

என்னும் குறள் மனசாட்சிக்கு விகற்பம் இல்லாமல் செயல்படுவது நடுவுநிலை என்று கூறுகிறது (Sundarrajan, 2015).

இந்த நடுவுநிலைமை என்னும் அறநிலையை அஷ்டப்பிரபந்தத்திலும் காணமுடிகிறது. அதனால், இவ்அறத்தின் இன்றியமையாமை வெளிப்படுகிறது.

“தானவர் உம்பர் உள்ளாய்

ஈர் உரு நின்று கடைந்தது வேலை”

என்று கூறுவதன் வழியாக, நன்மை தீமைகளை அமிர்தம் போலக் கடைந்து நடுவுநிலைமை என்னும் நிலையை யாதன அறிதல் வேண்டும் என்று கூறுகிறார். இதனால், நடுவுநிலைமை என்னும் அறம் சிறப்பிக்கப்படுவதை உணரமுடிகிறது (Ezhilventhan, 2017).

## பொறையுடைமை

‘பொறுத்தவர் பூமி ஆள்வார்’ ‘பொறுமை கடலினும் பெரிது’ என்று கூறுவார் கூற்றால் பொறுமையின் சிறப்பு வெளிப்படுகிறது. பொறுமை உடையவர்க்கு வாழ் நாள் முழுதும் இன்பமே கிட்டும் என்று பொறுமையை வள்ளுவம் விவரிக்கிறது.

“ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்

பொன்றுந் துணையும் புகழ்” (Sundarrajan, 2015)

என்றும்,

“அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார் பொறுத்தல் தலை”

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் தன்னுடைய அஷ்டப்பிரபந்தத்தில், இறைவனுடைய அருள் குணத்தை கூறுகையிலே பொறுமையின் சிறப்பை வெளியிடுகிறார் (Sundarrajan, 2015).

“நரகம் அடங்களும் சென்று எய்த்த பாவிக்கு

பொற்றாள் இன்றென் உச்சிவைப்பாய்”

என்னும் பாசுரம், தான் செய்த பாவங்களுக்காய் இவ்வுலகில் உழன்று திரிந்த போதும் அதைப் பொறுத்துக் கொண்டு அருளும் தன்மையுடையவன் திருமால் என்று கூறுமிடத்து பொறுமையை என்னும் பண்பைச் சிறப்பித்து விளக்குகிறது (Ezhilventhan, 2017).

## வாய்மையுடைமை

அறங்கள் யாவற்றையும் ஆராய்ந்து கூறுகையிலே சிறந்தது வாய்மை என்னும் பொய் கூறாமை ஆகும் என வள்ளுவம் விளக்குகிறது. சிறு துன்பத்தையும் ஏற்படுத்தாத சொல்லே வாய்மை ஆகும்.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு

பொய்யா விளக்கே விளக்கு"

என்று சான்றோர்க்கு பொய்யாமையே சிறந்த விளக்காக அமைவது ஆகும் என வள்ளுவம் கூறுகிறது (Sundarrajan, 2015).

பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும்,

"மெய்த் தவம் போர்உக, வெஞ்சொல்

இராமன் வில் வாங்கி வனைத்து

உய்த்த அம்போர், உகம் நாலும்

செய்தோர், உயர் வேங்கடத்து

வைத்த அம்போருகப் பூஆர் கழலை,

முறைமனு நூல் பொயத்த வம்போர்

உகவர் காமம் வேட்டுப் புரளுவரே"

என்று வாய்மையின் தன்மையை வள்ளுவத்தின் வழி நின்று விளக்கிக் கூறுகிறார் (Ezhilventhan, 2017).

மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்று உண்மைக் கூறுதல் என்னும் பண்பாகும். தமிழிலக்கியங்கள் அனைத்தும் வாய்மை என்னும் பண்பினைப் போற்றுகின்றன.

## நட்புடைமை

நட்பினைப் போன்ற நற்செயலும் இல்லை, பாதுகாப்பும் இல்லை என்பர் சான்றோர் மக்கள். இது மனிதனின் ஒரு அங்கமாகத் திகழ்கிறது. ஒருவனுடைய முன்னேற்றம் அவன் கொள்ளும் நட்பிலேயே உள்ளது. வள்ளுவர் நட்பினைப் பற்றி தனியே ஒரு அதிகாரத்தையே வடித்துள்ளார். சிறந்த நட்பை ஆராய்ந்து தெரியும் முறைமையை வள்ளுவம்,

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை

தான்சாம் துயரம் தரும்"

என்று இயம்புகிறது (Sundarrajan, 2015).

ஆய்ந்து கொள்ளாத நட்பு ஒருவனுக்கு இறப்பைக் கூட நல்கும் அளவிற்குக் கொண்டு சேர்த்து விடும் என்று பகருகிறது வள்ளுவம். இத்தகைய நட்பின் அறத்தை பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்,

"அற்றவர்சேர் திருஅரங்கப் பெருமாள் தோழன்"

என்ற பாசுரத்திலே விவரிக்கின்றார். ஒருவனுடைய குணம், குடி பிறப்பு, குற்றம் முதலியவற்றினை கண்டு ஆய்ந்து அவனோடு நட்பு கொள்ள வேண்டும் என்பதை இயம்புகிறார் (Ezhilventhan, 2017).

## ஈகை

இல்லை என்று இரப்பவர்க்கு இல்லை என்று கூறாது தருதலே ஈகை என்னும் அறம் ஆகும். ஒரு பொருளும் இல்லாத ஒருவருக்கு கொடுத்து உதவுவதே ஈகை ஆகும். மற்று ஏனையவர்க்கு கொடுப்பது பயனற்றது. அது ஏதோ ஒரு பயனை எதிர்பார்த்துத் தருவதே ஆகும். இதனை வள்ளுவர்,

"வரியாற்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்

குறியெதிர்ப்பை நீர் துடைத்து" (Sundarrajan, 2015)

என்று கூறுகிறார்.

ஈகை சிறப்பை,

"தார் ஏற்ற வெண்குடை மாவலி

வார்க்கவும், தாமரைமேல்

சீர் ஏற்ற தொல் நான்முகத்தோன்

விளக்கவும், செம் பொன் முடிக்

கார் ஏற்ற மேனி அரங்கேசர்

கையும் கழலும் ஒக்க

நீர் ஏற்றான் - வன் திருக்குறள் ஆகி

நிலைப் பெற்றதே"

என்று திருமால் வாமனனாய் தோன்றி மாவலியிடம் கொடைப் பெற்றமையை விளக்குவதின் வழியே ஈகையின் சிறப்பை விளக்குகிறார் (Ezhilventhan, 2017).

"ஈதல் இசைப்பட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு"

என ஈகையின் சிறப்பினை வள்ளுவம் குறிப்பிடுகிறது (Sundarrajan, 2015).

## அடைக்கலம் தருதல்

அடைக்கலம் எனக் கேட்பார்க்கு அபயம் தருதல் சிறந்த அறம் ஆகும். அடைக்கலத்தினது சிறப்பினை இளங்கோவடிகள், கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாகத் தரும் இடத்தில் குறிப்பிடுகிறார்.

"தவத்தோர் அடைக்கலம் தான் சிறிதாயினும்

மிகப் பேரின்பம் தருவது கேளாய்"

என்று, இவ்வுலகிலே மிக்க இன்பம் தருவது அடைக்கலம் என்று கூறுகிறார் (Subramaniyan, 2018).

அஷ்டப்பிரபந்தத்தில், பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் அடைக்கலத்தின் சிறப்பைப் போற்றுகின்றார்.

"மாகம், பிலம், திக்கு, இமையொர் உலகம், மழுவுடையோன்

நாகம், நல் நாடு அளவாக - பல் நாகம் நடுங்க, அம்பு

வேகம் கொடு தொடர-பறந்து ஓடியும், மீண்டு வந்து,

காகம், 'சரண்' என்ன, நம்பெருமாள் உயிர் காத்தனரே" (Ezhilventhan, 2017)

என்றும்,

"அணி, ஆர் மதில் சூழ்

ஆரங்கா! துவாரகையாய்! அடியேன் உன் அடைக்கலமே!" (Ezhilventhan, 2017)

என்றும் கூறுவதினால் அடைக்கலத்தின் மதிப்பினை வெளியிடுகிறார்.

"அடைக்கலம், தாயத்தவர் போல் உடல் உறை ஐவரையும்

அடைக்கலம், தாய் உலகம் கொண்ட தாள்களுக்கு ஆண்டம் உண்டு, அழல் -

அடைக்கலந்தாய்! அரங்கா! ஆயர் பாடியில், அன்று நெய்பால் -

அடைக்கலம் தாய் வைத்துவாய் நெரித்து ஊட்ட, அழும் ஐயனே"

என்று அனைத்திற்கும் அடைக்கலம் தரும் நாயகன் திருமாலே என்பதை இப்பாசுரத்தில் விளக்குகிறார் (Ezhilventhan, 2017). இதன் வழியே அடைக்கலத்தின் பெருமையானது வெளிப்படுகிறது ஆதலின், அடைக்கலம் தருதலும் சிறந்த அறமாக இருந்ததை பண்டைய இலக்கியங்கள் சுட்டுகின்றன.

## முடிவுரை

தமிழிலக்கியங்களில் அறக்கருத்துகள் நிரம்பி உள்ளதையும், அதன் சிறப்பினையும் அறிய முடிகிறது, அஷ்டப்பிரபந்தத்தில் அறக்கருத்துகள் பொதிந்து உள்ளமையினை பிள்ளைப்பெருமாள் ஐயங்காருடைய பாசுரங்களால் உணர முடிகிறது. அவற்றினை அகம், புறம் என்று பிரித்து அது சார்ந்த அறங்களை விளக்குகிறது இவ்ஆய்வு. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் அறக்கருத்துகளை வள்ளுவத்தின் வழியே நின்று விளக்கி உள்ளார் என்பதனை அறியமுடிகிறது. அஷ்டப்பிரபந்தத்தில் அகம் சார்ந்த அறக்கருத்தாக அறத்தொடு நிற்றலும், புறம் சார்ந்த அறக்கருத்துகளாக அன்புடைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, பொறையுடைமை, வாய்மை, கல்வி, நட்பு, ஈகை, அடைக்கலம் தருதல் முதலியன அமைகின்றன. அவற்றை விளக்கமாக இவ்ஆய்வு இயம்புகிறது. தமிழிலக்கியங்கள் அனைத்தும் மனதைத் தன்னுள் கொண்டு இயங்கும் மனிதன் செம்மாந்து சிறப்படைய அறக்கருத்துகளை இயம்புகின்றன. அவ்வகையில் அஷ்டப்பிரபந்தத்தில் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் வலியுறுத்திக் காட்டும் அறக்கருத்துகள் இவ்ஆய்வில் பெறப்பட்டன.

## References

Ezhilventhan, K. (2017) Ashtaprabhantham, Kavitha Publication, Chennai, India.

Puliyoor Kesikan, (2012) Manimekalai, First Edition – 2012, Paari Nilaiyam, Chennai, India.

Puliyur Kesikan, (2018) Kaliththogai, Paari Nilaiyam, Chennai, India.

Subramaniyan, S.V. (2018) Silappathikaaram, Eighth Edition – 2018, Kangai Book House, Chennai, India.

Sundarrajan, S.M. (2015) Thirukural, First Edition – 2015, Poompuhar Pathippagam, Chennai, India.

Thirugnanasambantham, S. (2010) Agapporul Vilakkam, Katheer Pathippakam, South Street, Thiruvaiyaaru, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License